**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, THIRUVIDAIMARUTHUR.**

| | | | |
|---|---|---|---|
| Deposition of Witness for | : PW-2 | Date | : 08.02.2024 |
| Case No. | : **O.S.** 38-2019 | Nationality | : Indian |
| Name | : ராஜேந்திரன் | Religion | : |
| Father's/Husband's Name | : நாராயணசாமி | Age | : 67 |
| Village | : | | |
| Taluk | : | | |

<u>வா.சா.2</u>

சாட்சி சத்திய பிராமாணம் செய்து விசாரிக்கபடுகிறார்.

**1ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை**

எனக்கு நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை வந்ததா என்றால் இல்லை. என்னை நீதிமன்றத்திற்கு யார் அழைத்து வந்தார் என்றால் வாதி வித்வசிங் அழைத்து வந்தார். நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தில் கண்ட விவரங்களை வழக்கறிஞரிடம் யார் கூறினார் என்றால் நான்தான் கூறினேன். தாவா சொத்தின் அடிமனை கோவிலுக்கு சொந்தமானது என்றால் சரிதான். தாவா சொத்தினை பார்வதி ஆச்சி குத்தகை சாகுபடி செய்து வந்ததற்கான ஆவணங்களை நான் பார்க்கவில்லை. தாவா சொத்தின் சர்வே எண் தெரியுமா என்றால் சர்வே எண் தெரியாது. எவ்வளவு விஸ்தீரணத்திற்கு வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று தெரியுமா என்றால் தெரியாது. நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தில் உள்ள சர்வே எண் மற்றும் விஸ்தீரணம் பற்றி எனக்கு தெரியாது என்றால் சரிதான். அதனை வழக்கறிஞர் அடித்து கொடுத்து நான் விவரம் தெரியாமல் கையொப்பம் செய்தேனா என்றால் சரியல்ல. நான்தான் விவரம் சொன்னேன். தாவா சொத்து வாதிக்கு எவ்வாறு கிடைத்தது என்றால் முதலில்

பார்வதி ஆச்சி வைத்திருந்தார். அவர் வாதியின் தகப்பனாருக்கு விற்றுவிட்டார். அவர் மூலமாக வாதிக்கு கிடைத்துவிட்டது. பார்வதி ஆச்சி வாதியின் தகப்பனாருக்கு எழுதி கொடுத்த ஆவணத்தை நான் பார்த்துள்ளேனா என்றால் இல்லை. 1ம் பிரதிவாதிக்கும் வாதிக்கும் என்ன பிரச்சனை என்று தெரியுமா என்றால் இடப்பிரச்சனைதான். 1ம் பிரதிவாதி 2ம் பிரதிவாதிக்கு சொந்தமான சொத்துக்களில் சாகுபடி செய்து வருகிறார் என்றால் சரிதான். வாதியின் தகப்பனார் வாதிக்கு உயில் எழுதி வைத்த தேதி தெரியுமா என்றால் தெரியாது. அந்த உயில் ஆவணத்தை நான் பார்த்ததில்லை என்றால் சரிதான். வாதி மற்றும் 1ம் பிரதிவாதிக்கும் இடையே எந்த தேதியில் பிரச்சனை நடந்தது என்றால் தேதி ஞாபகமில்லை. நான் வாதிக்கு வேண்டியவர் என்பதால் அவருக்கு அனுசரனையாக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**2ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை**

2ம் பிரதிவாதி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜரில் இருந்தார் குறுக்கு விசாரணையில்லை என்று கூறப்பட்டு குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது.

x

Taken down by Typed to my dictation
in Open Court read over to the witness
admitted and acknowledged by
him/her to be correct.

Sd/- N. Sivapalani,
District Munsif cum Judicial Magistrate,
Thiruvidaimarudur.